# யூலை – 20 – வெள்ளி

புனித அப்போலிநாரிஸ்

**ஆண்டவர் எனக்கு நலமளிக்க மனம்கொண்டார்: எசா. 38:20**

## முதல் வாசகம் : ஏசாயா 38 : 1 – 6, 21 – 22, 7 – 8

அந்நாள்களில், எசேக்கியா நோய்வாய்ப்பட்டு சாகும் நிலையில் இருந்தார் ஆமோட்சின் மகனான எசாயா இறைவாக்கினர் அவரைக் காணவந்து அவரை நோக்கி, "ஆண்டவர் கூறுவது இதுவே. நீர் உம்வீட்டுக்காரியத்தை ஒழுங்குபடுத்தும் ஏனெனில் நீர் சாகப்போகிறீர் பிழைக்கமாட்டீர்" என்றார். எசேக்கியா சுவர்ப்புறம் தம்முகத்தைத் திருப்பிக்கொண்டு ஆண்டவரிடம் மன்றாடி, "ஆண்டவரே, நான் உம்திருமுன் உண்மைவழியில் மாசற்ற மனத்துடன் நடந்து வந்ததையும் உம்பார்வைக்கு நலமானவற்றைச் செய்ததையும் நினைந்தருளும்" என்றுகூறிக் கண்ணீர் சிந்தித் தேம்பித்தேம்பி அழுதார்.அப்போது ஆண்டவரின் வாக்கு எசாயாவுக்கு அருளப்பட்டது. "நீ எசேக்கியாவிடம் சென்று கூறவேண்டியது. உன்தந்தை தாவீதின் கடவுளாகிய ஆண்டவர் கூறுவது இதுவே. உன் கண்ணீரைக் கண்டேன். இதோ நீ வாழும் காலத்தை இன்னும் பதினைந்து ஆண்டு மிகுதியாக்குவேன். உன்னையும் இந்தநகரையும் அசீரிய மன்னன் கையினின்று விடுவிப்பேன் இந்தநகரைப் பாதுகாப்பேன்."எசேக்கியா நலமுடைய, ஓர் அத்திப்பழ அடையைக் கொண்டுவந்து பிளவையின்மேல் வைத்துக் கட்டுங்கள்" என்று எசாயா பதில் கூறியிருந்தார். ஏனெனில், "ஆண்டவரின் இல்லத்திற்கு என்னால் போகமுடியும் என்பதற்கு எனக்கு அடையாளம் யாது?" என்று எசேக்கியா அரசர் கேட்டிருந்தார்.தாம் கூறிய இந்த வார்த்தையை ஆண்டவர் நிறைவேற்றுவார் என்பதற்கு அவர் உமக்களிக்கும் அடையாளம்இதோ, சாயும் கதிரவனின் நிழல் ஆகாசின் கதிரவக் கடிகையில் பத்துப் பாத அளவு பின்னிடச் செய்வேன். "அவ்வாறே சாயும் கதிரவனின் நிழல் அக்கடிகையில் பத்துப்பாத அளவு பின்னிட்டது.

**பதில்பாடல் :** அழிவின் குளியிலிருந்து ஆண்டவரே என் உயிரைக் காத்தீர்.

## நற்செய்தி : மத்தேயு 12 : 1 – 8

அன்று ஓர் ஓய்வுநாள். இயேசு வயல்வழியே சென்று கொண்டிருந்தார். பசியாயிருந்தால் அவருடைய சீடர் கதிர்களைக் கொய்து தின்னத் தொடங்கினர். பரிசேயர்கள் இதைப்பார்த்து இயேசுவிடம், "பாரும், ஓய்வுநாளில் செய்யக்கூடாததை உம் சீடர்கள் செய்கிறார்கள்" என்றார்கள்.அவரோ அவர்களிடமும், "தாமும் தம்முடன் இருந்தவர்களும் பசியாய் இருந்தபோது தாவீது என்ன செய்தார் என்பதை நீங்கள் வாசித்தது இல்லையா?இறை இல்லத்திற்குள் சென்று அவரும் அவரோடு இருந்தவர்களும் அர்ப்பண அப்பங்களை உண்டார்கள். குருக்கள் மட்டுமே உண்ணக்கூடிய அப்பங்களை அவர்கள் உண்டது தவறல்லவா? மேலும் ஓய்வுநாள்களில் குருக்கள் கோவிலில் பணியாற்றுவது ஓய்வுநாளைமீறும் குற்றமாகாது என நீங்கள் திருச்சட்டத்தில் வாசித்ததில்லையா? ஆனால் கோவிலைவிடப் பெரியவர் இங்கே இருக்கிறார் என நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்."பலியை அல்ல, இரக்கத்தையே விரும்புகிறேன்" என்பதன் கருத்தை நீங்கள் அறிந்திருந்தால் குற்றமற்ற இவர்களைக் கண்டனம் செய்திருக்கமாட்டீர்கள். ஆம், ஓய்வுநாளும் மானிட மகனுக்குக் கட்டுப்பட்டதே" என்றார்.

**தியானம்:** நியமனமாக்கப்பட்ட மதங்களில் மிகப்பெரிய பிரச்சனை ஆன்மீகத்தை சடங்காச்சாரத்துக்குள் அடக்க முயற்ச்சி எடுப்பது. ஆன்மீக மதசடங்குகளோடு தொடர்புடையது என்றாலும் அதற்குள் நிட்சயமாக அடக்கப்பட முடியாது. ஆன்மீக அனுபவம் பெற்றவர்கள் அனுபவத்தைப் பலவேறுபட்ட சடங்குகள் வழியாக வெளிப்படுத்தினர். இரண்டு காரியங்களுக்காக அவ்வாறு செய்தனர். 1.ஆன்மீக அனுபவம் அல்லது இறை அனுபவம் பார்க்கப்பட இயலாது. அது பிறருக்கு தெரிகின்ற வகையில் வெளிப்படுத்தப்பட வேண்டும் என்றால் செளிச்சடங்குகள் வழியாகத்தான் அவ்வாறு செய்ய முடியும். எனவே தங்களது ஆழமான ஆன்மீகம் அனுபவத்தை வெளிப்படுத்துவதற்காக சடங்குகளை உள்ளே கொண்டுவந்தனர். 2.இப்படிப்பட் சடங்குகளை சரியான மனப்பான்மையோடு செய்யும் போது தாங்கள் பெற்ற அனுபவம் மற்றவர்களுக்குக்கும் கிட்டும் என்ற நோக்கத்திற்காகவும் அவ்வாறு செய்தார்கள். ஆனால் காலப்போக்கில் சடங்குகள் சுட்டிக்காட்டும் அனுபவம் தொலைக்கப்பட்டு சடங்குகள் தம்மிலே முக்கியத்துவம் பெற ஆரம்பித்து விட்டன. நிலவைச் சுட்டிக்காட்டும் போது நிலவைப்பார்க்காமல் கை விரலைப்பார்க்கும் மூடத்தனத்திற்கு ஒப்பானது. இது இப்படிப்பட் சூழ்நிலையில் மதகுருக்களும், வழிகாட்டிகளும் சடங்குகளின் பாதுகாவலர்களாக மாறிவிடுகிறார்களேயன்றி சடங்குகளின் நோக்கம் நிறைவேறுகின்றதா என்பது குறித்து கவலைப்படுவதில்லை. ஓய்வு நாள் சட்டங்கள் இறை அனுபவத்திற்கு ஒரு மனிதனைத் தயாரிக்கும் முகமாகக் கொடுக்கப்பட்டவை. ஆனால் சட்டத்தின் பாதுகாவர்களும் பரிசேயர்களும் ஓய்வுநாள் சட்டங்களை தூக்கிப்பிடித்துவிட்டு அவை சுட்டிக்காட்டும் இலக்கை மறந்த அவல நிலையை இயேசு இன்றைய நற்செய்தியில் சுட்டிக்காட்டுகிறார். எனவே நாம் நம்முடைய வழிபாட்டு சடங்கு முறைகளை எந்த நோக்கத்திற்காக கடைப்பிடிக்கிறோம் என்பதை உணர்ந்து செயல்படுவோம்.